நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 330/2023

## P.W.3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | லதா |
| தந்தை / கணவர் பெயர் | : | ராஜு |
| கிராமம் | : | காவேரிபுரம் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW3** |
| வயது | : | 43 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 05–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.20 PM.

1. நான் தற்போது மேட்டூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சுப்ரமணி. நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 23.07.2022ம் தேதி 6.00 மணி அளவில் மேட்டூர் காவல் நிலைய சிறப்பு காவல் உதவி

ஆய்வாளர் சாம்பசிவம் நிலைய அலுவலில் இருந்தபோது சின்னசாமி மகன் சிவலிங்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரை பெற்று நிலைய குற்ற எண். 106/2022 சட்டப்பிரிவு 392 இதசவின் கீழ் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(புகார் அ.சா.ஆ .2 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகாருடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 மேட்டூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து வழக்கினை புலன்விசாரணைக்கு காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துகொண்ட காவல் ஆய்வாளர் 23.07.20222 ம் தேதி காலை 06.45 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மணிவேல், பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரிவரைபடம் தயார் செய்தார். **(பார்வை மகசர் அ.த.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்பு சாட்சிகள் சீனிவாசன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சாம்பசிவம், ஜெகநாதன், மணிவேல், சண்முகம், பிரகாஷ், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்த வழக்கின் எதிரி சீனிவாசனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதில் எதிரி அ.சா1டம் கொள்ளை அடித்த பணம் ரூ.550 யை செலவு செய்துவிட்டதாகவும், 23.07.2022ம் தேதி மதியம் 2.00 மணி அளவில் போலீசார் தன்னை பிடிக்க வருவதை பார்த்து ரயில்வே மேம்பாலத்தின் மீது ஏறிக்கொண்டு போலீசார் சுற்றி வளைத்தபோது எதிரி கீழே குதித்துவிட்டதாகவும், அதனால் வலது கால் காயம் ஏற்பட்டதாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

4. போலீசார் எதிரியை மருத்துவமனைக்கு அழைத்து சென்று எதிரியை மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்துள்ளனர். **(மேட்டூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட இண்டிமேசன் மற்றும் விபத்து பதிவேடு அ.சா.ஆ 6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்பு எதிரியை 23.07.2022ம் தேதி 14.00 மணிக்கு கருமலைக்கூடல் காவல் நிலைய சரகம் சிட்கோ ரயில்வே மேம்பாலத்தின் இடது புறம் வைத்து கைதுக்கான காரணத்தை

கூறி கைது செய்து 14.30 மணிக்கு மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்துள்ளார். கைது குறித்து எதிரியின் அம்மாவிற்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

5. எதிரியை அடைப்பு காவலுக்கு அனுப்பி வேண்டி கணம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அறிக்கை சமர்பிக்கப்பட்டது. அதன் பேரில் எதிரியானவர் மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் நீதித்துறை நடுவர் அவர்கள் மருத்துவமனைச் சென்று எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரி மீது 01.04.2023 எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. வாதி கொடுத்த பொய்யான வாக்குமூலத்தை பதிவுசெய்து சரிவர பரிசீலனை செய்யாமலும், அனைத்து ஆவணங்களையும் நிலையத்தில் வைத்தே தயார் செய்து எதிரிகளின் மீது பொய்யாக இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 01.40 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**